உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# அருள்ஞான சாதன மென்னும்

# துறையறி விளக்கம்



மதுரை தெற்குவாசல் சின்னக்கடை வீதி,

**மல்லி சு. வைத்திய நாதன் அவர்கள்**

விருப்பத்தின்படி


மதுரை புதுமண்டபம் புத்தகசாலை.

**இ.ராம குருசாமிக்கோனார் சன்**

ஜி. இராமசாமிக்கோன் அவர்களால்

அச்சிடப் பெற்றது.


காபிரைட். 1953 விலை அணு 8.

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ்
வடக்குமாசி வீதி குருசாமிக்கோனார் சந்து மதுரை.
முதல் பதிப்பு, காப்பி 1000, 53.

உ

பரமபதி துணை.

# அருள்ஞான சாதன மென்னும்

# துறையறி விளக்கம்.

சீராய்ந்து பார்த்துரைக்கும் பெரியோர்பாதம்
சென்னியின்மேல் கொண்டடியேன் திறமதாக
ஆராய்ந்து பார்த்தாறு முகனைப்போற்றி
அருந்தமிழா லவன்புகழை யன்பாய்ப்பாட
காராரும் குழல்வள்ளி பங்கனெங்கோன்
கலாபமயி லேறிவிளை யாடுஞ்சோலை
சூராதி சூரனென்ற துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (1)

பருதிமதி யனுதினமும் தேடும்நாடு
பங்கயன்மால் அடிமுடியும் காணாநாடு
கருவிகர ணாதியிதி லொடுங்கும்நாடு
கலாபமயில் விளையாடிக் கழிக்கும்நாடு
அருவியன லாறோடு மமுதநாடு
ஆனந்தக் கோட்டையெனும் அழியர்நாடு
சுருதிமுடி திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (2)

மூலமுத லாறுதலம் கீழேதள்ளி
முதிர்ந்துநின்ற மேலாறு தலத்தைநோக்கி
காலநின்ற யிடங்கண்டு காலனையுந்தள்ளி
கடைக்கோடி முனைமையம் கருத்தைப்பாய்ச்சில்
ஆலமுண்ட கண்டர்பதம் அர்ச்சித்தேதான்
அறுமுகவன் திருவிளையாட் டறிந்துகொண்டு
சூலகரன் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (3)

ஐந்துபெரும் பூதங்கள் ஒன்றாய்ச்சேர்ந்து
ஆதாரம் கடந்துநிரா தாரமாறில்
வந்துமயிர்ப் பாலம்நெருப் பாறுதாண்டி
வன்னிமுனை பீதிலே மனதைப்பாய்ச்சில்
கந்தமயில் சேவல்கொடி யங்கேகாணும்
கருத்தினு லறிந்துமனம் கண்டுதேறில்
தொந்தமிடும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (4)

மலைவாசல் மதியிரவி யடையும்போது
வன்னிஒளி தீக்காடு மதியோகோடி
தலைகீழாய்க் கால்மேலாய் தமரில்புக்கிச்
சச்சிதா னந்தவெளி சார்ந்துகண்டு
உலைவாயில் மெழுகதுபோ லுருகியுள்ளம்
ஒடுங்கிநிலை பெற்றவர்க்கு ஒளிகள்காணும்
துலைகாணும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே (5)

மந்திரதந் திரயோகம் வந்ததெங்கே
மறைஞான சாஸ்திரங்க ளொடுக்கமெங்கே
இந்திராதி தேவர்சபை ரிஷிகளெங்கே
இரவிமதி உதித்ததெங்கே யடைவதெங்கே
நந்திகொலு விருந்ததெங்கே நடனமெங்கே
நடுவன்னி நிலையெங்கே நடுவேசென்று
சுந்தரவேள் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (6)

இடுகாடு யின்னதென்று அறியமாட்டார்
இரவிதனை மதியமதி லிருத்தமாட்டார்
மடுவான சுனைகண்டு மூழ்கமாட்டார்
வாசியின்மே லேறிவிளை யாடமாட்டார்
தடுக்காத மனக்குரங்கைத் தடுக்கமாட்டார்
சச்சிதா னந்தவெளி சார்ந்தபேர்க்கு
சுடுகாடாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (7)

தீனியிலே ஆசைகொண்டு திரிந்துநீயும்
செத்திறந்து செத்திறந்து ஜெனியாதேகேள்
யோனியெனும் படுகுழியில் பாம்பங்குண்டு
ஒடுங்காது கடித்தவிடம் மீளாதப்பா
சீனியிலு மதிகரசந் தேனுமல்ல
சிகப்புமஞ்சள் கருப்புவெள்ளை நீலமல்ல
சூனியமாம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (8)

கலையிருந்த விடமெங்கே சுவையாறெங்கே
கருத்தரித்த விடமெங்கே தனலாறெங்கே
நிலையிருந்த மனமெங்கே காமமெங்கே
நிட்டையொடு ஞானமுறை நெறிகளெங்கே
புலையொழிந்த தலமெங்கே பூஜையெங்கே
புண்ணியபாவங்கள்மன மற்றதெங்கே
தலையுமென்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (9)

கடகரியைப் பிடித்ததன்மேல் கால்கொண்டேறி
கடைக்கோடி நடுத்தெருவே கரியைக்கட்டி
வடவையன லாறுமயிர்ப் பாலந்தாண்டி
வனசமலர் ஆயிரத்தெண் வாவிமுழ்கி
நடனமிடும் சபைமேல் குறத்திதெய்வ
நாயகனைத் கண்டுதொழு திறைஞ்சிப்போற்றி
சுடரொளியாம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (10)

ஆதியந்த நடுவுமல்ல ஆண்பெண்ணல்ல
அலியுமல்ல உருவுமல்ல ரூபமல்ல
ஜாதியென்ற யெழுவகையும் தோற்றமல்ல
தளர்பூமி நீர்க்காலும் வெளியுமல்ல
ஓதியநூல் அறிவுமல்ல உணர்வுமல்ல
ஒளியுமல்ல வெளியுமல்ல ரூபாரூபம்
ஜோதியென்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (11)

வந்ததையும் போனதையும் காணமாட்டீர்
மனமிருந்த யிடம்பரமென் றெண்ணமாட்டீர்
சிந்தினதைப் பொருக்கியொன்றாய் சேர்க்கமாட்டீர்
திருநடனங் கண்டுதெரி சிக்கமாட்டீர்
அந்தரத்தே வாசிமலைறியமாட்டீர்
ஆறுமுக மொருமுகமாய் அந்தரத்துள்
தொந்தமிடுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (12)

மாகமுகில் நிறைந்தெருமை தன்னிலேறி
மறலிவந்தா லவனையும்நீர் மறிக்கமாட்டீர்
தேகமதை ரட்சிக்க வழியுங்காணீர்
சித்தாந்தம் வேதாந்தம் தெளியமாட்டீர்
ஆகம்விட்டு உயிர்போகும் போதில்விழுந்து
அழுதபயம் விட்டுமன தாறிப்போவீர்
தோகைமயில் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (13)

விழிநடுவே மெய்ஞ்ஞானம் வெளியதாகும்
வேலவனார் திருக்கூத்தை மேவிப்பாரு
அழிவறியாத் தேனூறுங் குலத்தைக்காண்பீர்
அமுர்தமங்கே பாய்ந்தொழுகு மருவிபோலே
தெழிவதனால் சிந்தைதனில் கண்டுதேறில்
தேகம்விட்டு உயிர்பிரியா திருக்குஞ்சிந்தை
சுழிமுனைமேல் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (14)

பண்டயனு மாலுமடி முடியுந்தேடிப்
பாரும்விண்ணும் தேடறியாப் பாதந்தன்னை
சண்டமதி லூடேறி யிடைபின் ஒன்றாய்
கடைக்கோடி மத்தியிலே கருதிச்சென்றால்
அண்டபிண்டம் ஒன்றாகி யமர்ந்தமூலத்
அடிமுடியுங் காணுமங்கே அறிவார்நல்லோர்
தொண்டைமுனை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (15)

அம்பத்தோ ரக்கரத்தால் நவத்துவாரம்
    அடைத்துஒரு வழிகூடி யகண்டவாசல்
இன்பமுறப் புகுந்துவரு கோணத்துள்ளே
    இருந்துவினை யாடிவரு மெங்கள்கோமான்
வெம்பாத பலவடிவாய் விளங்குமெய்யன்
    மெல்லடியைப் பணிந்தவர்க்கு வினைமூன்றும்போம்
துன்பமறுந் திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (16)

கலையான ஜீவனீ ராறுமுள்ளே
    கழியுமொரு நான்குகழி யாமமுள்ளே
நிலையான பரைவாசல் தன்னில்கூட
    நீலமயில் வாகனனார் நிர்த்தங்காணும்
தலையான வெளிதனிலே ஏறிச்சென்றால்
    சச்சிதா னந்தகுரு தாளுங்காணும்
துலையாத திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (17)

அழுதுவிழுந் துருண்டுபுரண் டலறியேங்கி
    ஆவியெங்கே போச்சுதென்று அலறுவார்கள்
முழுதுயிரை யெமன்கொண்டா ரென்பார்மாந்தர்.
    முன்புவிட்ட குறைமுடிந்த முறைமைகாணார்
உழுதுபயி ரிட்டவர்க ளுண்ணலாகும்
    ஒருமனதா யறிவில்நின்றோ ருண்பார்ஞானம்
தொழுதுருகித் திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (18)

அணையேது கரையேது நிலையங்கேது
    அமுர்தம்வரு மானந்த வாரிக்கப்பால்
பிணையேது போவதற்குத் துணைதானுண்டோ
    பெருங்காடு கரடிபுலி பெருக்கமுண்டு
பணையாம லொருமனதாய் வள்ளிபங்கன்
    பதம்நெஞ்சில் மறவாமல் பாதைகூடி
துணையாகுந் திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (19)

அல்லேது பகலேது இரண்டுமில்லை
ஆசையினால் மாய்கையினால் ஆண்மையேது
உல்லாசக் கெருவங்களொன்றுமில்லை
உருவேது அருவேது உண்மைதன்னை
எல்லோருந் தேடியலைந் திருந்தார்காணார்
எங்கோமான் வள்ளிபங்க னிருந்தவீடு
சொல்லாத திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (20)

கற்புடைய மனத்தோர்கள் கால்ரெண்டைத்தான்
கடைக்கோடி நடுத்தெருவே கட்டும்போது
உற்பனமு மறிவார்க ளுண்மைகாண்பார்
ஓரெழுத்து மீரெழுத்து முண்மைகாண்பார்
எப்படியும் கடைக்கோடி முனையில்நிற்பார்
இறவார்கள் பிறவார்க ளெமனைவெல்வார்
சொற்பொருளாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (21)

முனிவரொடு ரிஷிமுனிவர் சித்தர்தாமும்
முராரி அயன் தேவர்களும் முன்னோர்தாமும்
மனிதர்களும் அசுரர்களும் மாதவத்தோர்
வாசிபிடித் தேறிமயிர்ப் பாலந்தாண்டி
தனிவழியே தமர்வாச லூடேசென்று
தாண்டவம்செய் தில்லைவனம் சார்ந்தபேர்க்கு
தொனிமுழங்கும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (22)

பாழ்வெளியுஞ் சுடுகாடு மறியமாட்டார்
பாரிலுள்ள ருயிரனைத்தும் ஒடுக்கங்காணார்
ஊள்வினையும் உள்வினையும் ஒழிக்கமாட்டார்
ஓங்கார முருகனின்ற உருவங்காணார்
கேள்விமுத லற்றவிடம் தன்னைக்காணார்
கெருவமுடன் ஓங்கார ஒடுக்கங்காணார்
சூழ்வெளியாம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (23)

ஆதார மாறும்நிரா தாரமாறும்
ஆறிருகால் புரவிதனி லேறிச்சென்றால்
வேதாவி ஞேலவி ஞேலயாகும்
விந்துநா தங்கடந்து வெளிபூடேறில்
கேதாரம் வடகைலை காசிகன்னி
கிட்டாத வைகுண்டம் சொர்க்கலோகம்
சூதான திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (24)

அரிதான நால்வேதம் ஆறுசாஸ்திரம்
அளவற்ற சாஸ்திரங்க ளறிந்தாலென்ன
தெரிவான விஞ்சைமுதல் மந்திரங்கள்
தியானமுதல் கற்றதினுல் திரேகமாமோ
மரியாத எழுத்தறிந்து வாசியேற்றி
வடிவேலன் பதம்போற்ற மறலியேது
துரியமென்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (25)

உடலைவிட்டு உயிர்போகும் போதுஜீவன்
உற்பனமாய்க் கண்டவர்க ளுண்டோஜன்மக்
கடலைவிட்டுப் போகவுமே காணமாட்டார்
காதுரெண்டும் கடைநடுவே நிறுத்தும்போது
மடலைவிட்டுத் தீனமூர்த மருவிப்பாயும்
மறலியில்லை வாஞுஞ மறியலாகும்
சுடலையதாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (26)

தாயாரும் பெண்டுபிள்ளை தந்தையாரும்
சடலம்விட்டு உயிர்போனல் துணைதானுண்டோ
நீயாரு அவராரு நினைவில்காணும்
நினைவுகெட்டோர் சொல்வார்கள் நெறிபாராமல்
பேயாகிப் போனர்கள் பிணமென்பார்கள்
பிண்டம்விட்டு உயிர்போனல் பிறகுண்டாமோ
தோயாத திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (27)

பக்கமுனக் குற்றதனை வேண்டுமென்றால்
பார்வைரெண்டும் நடுநிறுத்திப் பார்க்கப்பார்க்க
திக்கெட்டுப் பாலகரும் வீரபாகும்
சேவல்மயில் வேலுடனே செவ்வேள் தோன்றும்
ஒக்கவுனக் குற்றதனை உரைப்பாருண்மை
ஓங்கார முருகனோ ரெழுத்துங்காணும்
துக்கமறுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (28)

தணிவுகொண்ட புத்தியினால் ஞானமாகுஞ்
சசிரவி ஒன்றானால் யோகமாகும்
மணிபூர கம்கண்டால் மவுனமாகும்
வாசியொடு மவுனம்வந்தால் சாவுபோகும்
அணியணியா யண்டபிண்ட மடுக்காய்த்தோன்றும்
அறுமுகவ னுன்னைவந்து அடிமைகொள்வார்
துணிவுகொண்டு திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (29)

தொக்கிலுயிர் யெண்சாணு மொடுங்கும்போது
சூக்ஷமமாம் ரூபமது தோன்றுமோசொல்
சக்கிலமும் நாதமொன்றாய்த் தொக்காம்வேளை
தோணவருமோஉயிர்தான் சொரூபங்காணீர்
பக்குவமே யிதையறிந்து பார்த்தபேர்க்கு
பரிசமதி லோடிநறும் பாடல்காண்பார்
சொர்க்கமாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (30)

சங்கநிதி பதுமநிதி இரண்டுமங்கே
தருவைத்தும் வாழ்கின்ற தலந்தானங்கே
திங்கள்ரவி சுற்றிவரும் சிகரமங்கே
திருக்கைவே லாயுதனார் சேர்வையங்கே
மன்றிலுள வுயிரனைத்தும் ஒடுக்கமங்கே
மலமறுத்த வாசலங்கே வள்ளியானை
தங்கனுறை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (31)

கைலாசம் வைகுண்டம் பிர்மலோகம்
கனகமர்த ரோமபுரங் காணுமங்கே
மயிலாடுஞ் சோலையங்கே சகஸ்திரத்தெட்டு
வனசமலர் விரிந்திருக்கும் வாவியங்கே
அயனரனும் திருநடன மாட்டமங்கே
அறுகோண நடுவணையை யறிவார்கல்லோர்
துயிலான திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (82)

கருவிகர ணுதிகளு மொடுக்கமங்கே
கடைவாசல் வெளிவாசல் காண்பதங்கே
திருநெடுமால் பள்ளிகொண்ட தலந்தானங்கே
சிகரகோபுரத் திருநாள் தீர்த்தமங்கே
அருவிவரும் குளமங்கே அமுர்தமங்கே
அண்டர்தாம் நிறைந்தஅம் பலந்தானங்கே
துருவநிலை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (83)

வடிவுடைய பெண்ணுசை மண்ணிணுசை
மாசற்ற பொன்னுசை மாற்றிநீதான்
கடிகமழும் பூங்குழலாள் வள்ளிபங்கன்
கமலமலர் பாதமதை மனதில்வைத்து
இடியனந்தம் ஒலியாகும் கடனஓசை
இருகோடி வீதிநடு வேறிப்பார்த்தால்
துடிமுழங்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (84)

விடமான விழிமடவா ராசைதன்னில்
வீழ்ந்துழன்று திரிந்தலைந்து மெய்சோர்ந்தார்கள்
உடலான தழிந்துஉயி ரிழந்துபோனுல்
உண்மையென்ற ஞானமுனக் குதவியாமோ
கடலான பிறவிதனைக் கடந்துஞானக்
கடல்மூழ்கி ஆனந்தக் களிப்புங்கண்டால்
துடாாது மாய்கைபெருந் துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (85)

திட்சைபல கற்றதினு லாவதென்ன
சிந்தைபல தொன்றுனல் திட்சைசித்தி
பேச்சுரைகள் பலவுரைத்து மாவதென்ன
பேசாத மௌனமல்லோ பேசவேண்டும்
மாச்சல்மெத்த யில்லையடா மனமொன்றுனல்
வாசிநடு வீதியிலே வாழலாகும்
சூட்சமது திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (36)

நீரையள்ளி நெற்றியுடல் நிறையப்பூசி
நிஷ்டைபிடித் திருப்பவர்போல் நிலத்தோர்காண
கூரையில்லா நிருவாண மாகநின்றுங்
குன்றுமல் இருந்ததினுல் மௌனியாமோ
ஆறையறிந் தோரெழுத்தை அறிந்தால்ஞானி
அவன்மௌனி யோகிசித்த னவன்ஜென்மத்தைச்
சூரைகொளும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே (37)

சத்த ஸ்பரிச ரூபரச கெந்தத்தைத்
தானடக்கி ஒருநினைவாய் மூலம்பாரு
தத்துவத்தொண் ணூற்றாறுஞ் சரணம்பண்ணும்
சசியிரவி ஒன்றான தலத்திலேதான்
நித்யகலி யாணிகொலு நிறைந்தவீடு
நெடுந்தோகை வாகனனார் நிர்த்தம்பாரு
சத்தவெளி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (38)

கொல்கிறதும் பேய்பிணியோ யேமனதானே
கூடுகிடக் குயிரேமன் கொண்டானென்பார்
வெல்கிறதும் தோற்கிறதும் விதியேயென்பார்
விதியான நாதவிந்தை விளக்கிப்பாரார்
புல்கிறதோர் வேளைவிந்து நாதங்கூட்டி
போனதுறை விதிபுருவ நடுவேகாலன்
சொல்கிறதாம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (39)

இடியனந்தம் கோடியதாம் சிலம்பினோசை
இருகோடி வீதிநடு வேறிப்பார்த்தால்
வடிவனந்தங் கோடிரவி மதியாங்காந்தி
மாச்சலல்ல மாச்சல்மெத்த மருவிப்பார்க்க
முடியனந்தங் கோடிவிதி மாலைபூண்ட
முருகேச ரென்றவரு முக்கண்ணோனும்
அடிமுழங்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (40)

அரூபமதோ அனாதியதோ ஆதியானு
மாதியந்தம் நடுவணையோ ஆணோபெண்ணோ
உருவமதோ யிருவர்களோ ஒருவர்தானோ
ஓங்கார பிரணவத்தா லொடுங்குங்காலம்
புருவநடு வேநீதா னேறிப்பார்த்தால்
பொன்றாத விளக்கொளிதான் பொங்குந்தீபம்
சுரூபமதாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (41)

திக்கிலுள்ள பாலர்களும் தேவர்தாமும்
ஜெகமீரே ழாயுள்ள ஜென்மத்தோரும்
ஒக்கவொரு முகமாகி சமையமீறு
முடலலைந்து சாஸ்திரவே தங்களாய்ந்து
தர்க்கமிடும் கனகசபை தன்னில்வந்து
ஜாதியென்ற வகையெல்லாஞ் சார்ந்துபார்க்கில்
சுக்கிலமாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (42)

பொய்யடைத்து வைத்திருந்த மலபாண்டத்தைப்
போற்றிவையா தடைத்தார்கள் புவியிலுள்ளோர்
மெய்யடைத்து வைத்திருந்த பாண்டந் தானும்
வீழ்ந்தாலும் உடையாது வெடித்திடாது
கையுமெய்யு மாகவும்நீ காணவென்றால்
கருதிப்பார் ஞானத்தின் கண்ணினாலே
துய்யவெளி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (43)

கருவிருந்த தலமங்கே முப்பாழங்கே
கால்களப்பனி ரெண்டான புரவியங்கே
அருவியெழுங் குளமங்கே வசனம்பூத்த
வாயிரத்தெட் டிதழங்கே அமுர்தமங்கே
குருவிருந்த தலமங்கே முச்சந்தியங்கே
கோலமயில் மீதில்வரும் குமரனங்கே
துருவநிலை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (44)

இரவிமதி உதித்ததங்கே அடைவதங்கே
ஈரேழு லோகமுதித் தொடுக்கமங்கே
அரவணியும் பாலாழி யானதங்கே
ஆலிலைமேல் பள்ளிகொள்ளு மாயனங்கே
தாரகதமா மயில்சேவல் கொடியுமங்கே
சூராதி சூர குரு வானதங்கே
சார்குருவாக் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (45)

காலையிலே மூலத்தில் கருத்தைவைத்துக்
காலிரண்டு நடுநிறுத்திக் கருத்தொன்றாக்கி
மாலையிலே வரும்பிறவி மாய்கைதள்ளி
மலமறுத்து வாசிதனை நீக்கிச்சோதி
வேலையிலே வேலெடுத்தோன் பாதம்போற்றில்
வினையொழிந்து போகுமடா வேதம்பொங்குஞ்
சோலைகிரி திருவாடு துறையைப்பாக்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (46)

உமையாளும் அரனுமொன்றா யிருந்ததங்கே
உதயகிரி அஸ்தமன கிரியுமங்கே
இமையோரும் முனிவர்குழாங் கூட்டமங்கே
இரண்டுதலை மாணிக்க மிருந்ததங்கே
சமயமொரு பனிரெண்டும் ஒடுக்கமங்கே
சண்முகனும் வள்ளிதெய் வானையங்கே
சமைதாங்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (47)

காமனுட வீடதுதான் விந்துதானம்
காலனுட வீடதுகா தாந்தமூலம்
பூமன் விதிதப்பினதும் புருவமையம்
போகநிலை தட்டுமறு கோணம்புக்கில்
ஈமயிசை கொண்டுதிருப் பதியேயாகும்
எரிஒளிரும் சுடுகாடு யெண்கோணவீடு
சோமநிலை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (48)

வீடுகட்டி ஒன்பதுபாழ் வாசல் விட்டு
மேல்கூரை தோலாலே மேய்ந்துவைத்து
மாடுகொண்டு மும்மலக்கா டுழுதுஞான
மறைவிதைத்து கருணைவெள்ளம் வயலில்பாய்ச்சி
தேடரிய வயல்விளைந்து அறுத்துமேலே
சிதம்பர விலாசமது செருக்கிச்சின்னம்
சூடுகொண்ட திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (49)

படுத்துறங்கும் போதிலைந்து பூதமெங்கே
பஞ்சபொறி புலன்கரணம் போனதெங்கே
உடுத்த யிதுலாடையெங்கே யறிவுமெங்கே
உறங்கும் போதினிலுயிர்தான் ஒடுக்கமெங்கே
அடுத்தவறு கோணத்தைத் திறந்துபோற்றில்
அப்பவல்லோ பிறவியறுமல்லாலுன்னை
தொடுத்துவரும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (50)

ஹரியெழுத்து மரனெழுத்துங் கண்டபேர்கள்
அறிவார்கள் மௌனமென்ற வக்கரத்தை
ஈரியெழுத்துங் கடையெழுத்துங் கண்டபேர்கள்
கருமத்தை மாற்றிடுவார் கருத்தினாலே
வரிஉழுவைத் தோடுடுத்தோன் மாதுங்கூடி
வாழ்ந்திருக்கும் வீடதுதான் மௌனவீடு
துரியமென்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (51)

பாரேழு விசும்பும் மாதித்தன்விடு
பருவரையும் சிறுவரையும் மாத்தின்கப்பம்
காரேழும் கடலேழும் மாத்திணக்தான்
கண்கூட முகக்கூடு மாத்தின்கொப்பு
வேராக்கும் பரவெளிமெய்ஞ் ஞானமாகும்
விந்துநாதம் மாத்தின் வித்ததாகும்
தூராகும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (52)

கோணுமல் குணங்காமல் கதிப்பதாகக்
கொடிமுடியா யிரத்தெட்டுக் கவரதாக
காணுமற் கீழ்மேலும் முட்டி யெட்டி
கனகமாயிரத் தெட்டு மாத்துமாக
ஊணும ஊணிற்கு ஒருவர்கெட்டி
ஓங்காரக் கம்பவெளி அதற்குமப்பால்
தூணுன திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (53)

கடைச்சிமிட்டி லிருந்தாலும் கடவுள்பாதம்
கருத்துவைத்துக் காலிரண்டு மூலத்தூணில்
அடைத்திருந்த பொருளெல்லாம் வெளியாய்ப்போகும்
அப்பவல்லோ பிறவியெல்லா மகன்றுபோகும்
உடற்சேர்த்து இடையில்சிறு பாதைதன்னில்
உபயவெளி தனில்நின்று வொளியைப்பாரு
தொடர்ச்சியறுக் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (54)

ஆரியநாட் டின்சிறப்பு வரியப்போமோ
அனந்தவிழி அரவுக்கு அடங்காதப்பா
சூரியர்சந் திரர்முனிவர் குருக்கள்சித்தர்
சுடர்மூவர் பஞ்சகர்த்தா சூட்சாதிவீரர்
காரிகையா னந்தமிகக் களிப்பாற்கூடும்
கனகசபை தனில்கூட்டங் கண்கொள்ளாது
சுகிர்தமாக் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. (55)

கயன்பிறகே பன்னிருகால் புரவிகட்டிக்
காலடங்கக் கீழ்துண்ட முனையைப்பாரு
கயம்பெறவே யிடைவெளியே கடந்துசென்றால்
கடனவொலி கேட்குமடா நடுவீடிற்றான்
ஜெயம்படுங்கா ரியங்களெல்லாஞ் சித்தியாகும்
தேசிகுரு வாண்டியைமேல் தெரிசித்தாக்கால்
சயம்புலிங்கம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (56)

புளிப்புடையி லரிபுகுந்தால் பொறியைத்தின்னும்
பொல்லாத தத்துவத்தைப் பிடித்துக் கொல்லும்
கலிக்குமெழு பிறவிகளைக் கனலாய்ப்பண்ணும்
காரைகாணு மும்மலத்தின் கருவைத்தின்னும்
பலிக்குமடா நாம்நினைத்த காரியங்கள்
பரவெளியில் திருநடனப் பாதந்தன்னில்
ஜொலிக்குமடா திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (57)

பொய்யு மெய்யும் பொருந்தியதோற் றொப்பைக்குள்ளே
பூதமஞ்சும் பொருந்தாமல் பொன்றிப்போனால்
உய்யும்வகை யறியாம லொன்றுக்கொன்று
உயிரிழந்து போனதினால் உதவியுண்டோ
தையுமா சியுமடங்கி மனமொன்றாகிச்
சற்குருவின் பாதத்தைச் சார்ந்துநின்று
துய்யநிறத் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (58)

உத்தாரும் உறமுறையா ராசைவிட்டு
உடன்பிறந்த பெண்டுபிள்ளை யுறவும்விட்டு
பெத்தாரும் தந்தையுட ஆசைவிட்டுப்
பிழையான பிறவியெல்லாம் பின்னேதள்ளி
சித்தாந்தம் வேதாந்தம் தெளிந்துபார்த்து
சிவயோக சாதனைகள் செலுத்துவோர்க்கு
சுத்தாங்கத் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (59)

சோறுகட்டி வைத்திருந்த தோல்கூடப்பா
தோலழிந்தால் ஜீவனெங்கே சோறுமெங்கே
நீறையள்ளி நீறிறைத்து நிஷ்டைசெய்வாய்
நிலையெங்கே நினைவெங்கே நெறிதானெங்கே
ஆறைஉண்ணித் தொழுதுநின்றீ ராருங்காணீர்
அச்சபைமேல் அம்பலத்தி லாடிநிற்குஞ்
சூரைவென்றோன் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (60)

கற்பணியும் கட்டில்மெத்தை மாடுகன்று
காரிழையாள் தந்தைமக்கள் கரிதேர்வீடு
பொற்பணியா பரணம்பால் சர்க்கரை தேனெய்யும்
புகழுடனே பலபலவாய் போற்றிவைப்பார்
கற்பகிலே நிற்பதெங்கே யழிவதெங்கே
கண்ணெட்டித் தானறியார் கண்டதெல்லாஞ்
சொற்பனமாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (61)

பகுத்தறிவில் லாமையினால் பிறப்பில்வீழ்ந்து
பஞ்சபா தகமுதலாய் பலபாவங்கள்
வகுத்துரைக்க முடியாது ஜென்மங்கோடி
வகையனந்தம் பிறந்திறந்து மாய்ந்தோனிந்நாள்
சகிக்கமுடி யாதினிமேல் பிறப்பிறப்பு
சற்குருதே சிகனேஉன் பதந்தாவென்று
தொகுத்துரைத்த திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (62)

அருக்கன்மதி செருக்குமிடந் தன்னிலேதான்
ஆறிருகால் புரவிதனை யதிலேகட்டி
பரிக்கிறைத்தான் நற்றுவத்தைப் பரிவாயீந்து
பரவெளியா னந்தவெள்ளம் பண்பாய்க்கொண்டு
அருக்கியமாய்ச் சுருக்கிமலக் காடரித்து
அனல்கொளுத்தி மனதாசை யெல்லாஞ்சுட்டு
சுருக்கிநின்ற திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (63)

கயமுகவன் மாலையிரு காலையூன்றிக்
கரும்புரவி யேறியிரு கடையிற்சென்றால்
வியனுலகில் தெரியாத அதிசயங்கள்
விதவிதமாய்க் கண்டுமனம் விரிந்தஞானம்
பயனுதவ வேண்டுமென்றால் பணிந்துநின்று
பதம்பெறலாம் குமரனங்கே பாதமீவார்
துயரகலுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (64)

புயமீரா றுடையானைப் போற்றியண்டம்
பொன்மாது புவிமாது புணர்ந்தாய்போற்றி
ஜெயமாக நாம்நினைத்த காரியங்கள்
செய்திடவுங் கடைக்கண்பார் திருக்கைவேலா
தயவாக எனையாண்டு கொள்வாய்நாளும்
சற்குருவே யென்றுஅடி தலைமேல்கொண்டால்
துயர்தீரும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (65)

ஜாதிவகை சமயவகை யிரண்டும்நீக்கு
தத்துவத்தை யாராய்ந்து பார்த்துக்கொண்டு
ஓதிஉண ராதஉப தேசங்கற்று
உயிர்நிலைக ளறிந்துமன மொடுங்கிநின்று
வேதியனு மறியாத கமலபாதம்
விளம்புவரோ பொட்டெனவே விழிப்பார்க்குண்டாம்
ஜோதிமயத் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே, (66)

ஏங்கிரவி யிபமுகவ னிடத்தில்நின்று
இடைவழியே தடுமாறு தேறிச்சென்றால்
நீங்கிவிடுந் தமர்வாச லூடுசென்றால்
நிலையறியா தொருமனதாய் நின்றுள்ளே
வாங்கிவிடும் ஒளிக்குள்சிலம் பொலிதானங்கே
மாட்டுவிக்கும் தடுமாறு தேறிநில்லு
தூங்குவதோ திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே, (67)

அளவளவா யவரவர்க்கு நிறைந்தஜோதி
அதன்பெருமை யாராலு மறியப்போமோ
உளராம லொருமனதா யிருந்துநீயும்
யோகசா தனைதினமும் செய்துவாநீ
தளராமல் மனந்தன்னை பெலப்படுத்திச்
சாதகமாய்ப் பிறவியறுந் தாழ்ந்துசிந்தை
கழலாத திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே (68)

போக்குவரத் தறிந்துயிர் புறம்போகாமல்
புரவாச லொன்பதையும் பூட்டிஒன்றாய்
நாக்குநுனி மேலேற்றி முச்சந்திக்கண்
ஞானவித்தை நடுநிறுத்தி ஞானவாசல்
தூக்குவது மேலேறி வெளியில் சென்றால்
ஷண்முகமுந் தோணும்விட்ட குறைதானுன்னை
தூக்குமது திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (69)

அடர்ந்தமலர்க் காடுவெட்டி வெளியதாக்கி
ஆறெழுத்தின் வாளாலே அறுத்துச்சுட்டு
படர்ந்துவரும் பிறவியெல்லாம் பஞ்சுத்தீயாம்
பாழ்வினையுந் தீவினையும் பாழாய்ப்போகும்
கடந்திடுவார் பிறவியென்ற கடலைநீக்கிக்
காமவினை ஜென்மமெல்லாங் கருணைவாளால்
துடர்ந்திருக்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (70)

பாசவினை யாலறிவு பாழதாச்சு
பரவெளியில் சேர்ந்ததனால் பிறவிபோச்சு
நேசமது உரைத்ததினால் ஞானமாச்சு
நிஷ்டையது புரிந்ததினால் யோகமாச்சு
வாசிதனைக் கற்றதினால் மௌனமாச்சு
மனமிறந்த விடந்தனிலே முத்தியாச்சு
தோஷமறுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந்தோற்றமாமே. (71)

நில்லாத மனத்தோர்க்குக் காலங்கேது
நிஷ்டையறி வில்லார்க்குத் தலையங்கேது
கல்லாத மூடருக்கு அறிவெங்கேது
கருத்தறியாக் காமியர்க்கு ஞானமேது
எல்லோரும் போகவென்றால் பாதையேது
எழுத்தறியாப் பாவியர்க்கு இடமங்கேது
சொல்லார்கள் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (72)

வித்தில்லாப் பிறவியுண்டோ வெளியொளிக்கு
வித்துண்டோ வெளியொளிக்கு வெளிதான்வித்தோ
சித்தில்லா தண்டமுண்டோ குருவில்லாமல்
தேசத்தில் கண்டறிநீ தேகத்துள்ளே
ஒத்துப்பா ரடைப்பெல்லாம் வெளியாய்த்தோணும்
ஓசையிட்ட மணிபூரம் பேச்சுங்காணும்
சத்தெல்லாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (73)

கீழ்வரம்பு மேல்வரம்பு இரண்டுமொன்று
கீழ்சாதி மேல்சாதி யிரண்டுமொன்று
தாழ்வதுவு முயர்வதுவு மிரண்டும்ஒன்று
சந்தோஷா சந்தோஷ மிரண்டுமொன்று
மாழ்வதுவும் பிறப்பதுவு மிரண்டுமொன்று
மனமிறந்த இடந்தன்னை மருவிப்பாரு
சூழ்வெளியாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (74)

பரிதிமதி யறியாத யிடத்தைப்பாரு
பரவெளியுஞ் சுடுகாடும் பாதங்காணும்
எருதுபசு சன்றவிடம் தன்னைக்காணீர்
இரவுபக லற்றவிடம் தன்னைப்பாரு
ஒருத்திபல ரைச்சேர்ந்த யிடத்தைக்காணீர்
ஒருகாலில் நடக்குமிட முற்றுப்பாரு
சுருதிமுடி திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (75)

உப்பொடுநீர் சேர்த்ததுபோல் உலகமெல்லாம்
உயிர்க்குயிராய் சத்திசிவம் உலாவிநிற்கும்
எப்படிநீ கண்டறிவாய் யிறைவன்தன்னை
இருதயத்தை பத்திபுத்தி யாகச்செய்தால்
செப்பரைசித் தம்பலம்பே ரம்பலத்தில்
திருநடனம் காணுமதை செப்பார்வல்லோர்
சுப்பிரமன் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுங் தோற்றமாமே. (76)

ஒளியான வெளியெல்லா மோடிப்பார்த்து
ஒருகுதிரை இருதெருவி லோடும்வீதி
பழிகாணும் தொட்டவுட னிரண்டாயோடிப்
பாயுமடா முனைகூர்மை பன்னிருகாணுடி
விழிகாண நடவாது வேகமெத்த
வெட்டவெளி வீதிவிலா சத்தில்கட்டு
கழிபேதம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுர் தோற்றமாமே. (77)

தானுவுமை திருநடன சபைதானங்கே
சங்கார காலமதில் சத்திசிவமொன்றே
ஆணுருவோ பெண்ணுருவோ அலியோ அந்தோ
ஆமையதோ ஊமையதோ அருபாரூபோ
சேணுலவ வரைந்தமகா மேருவங்கே
தேகத்தில் மூலமதில் சிரசுமுட்டி
தோணுமது திருவாடு துறையைப்பாக்கில்
சூரியனுஞ் சந்திரனுங் தோற்றமாமே. (78)

பூனையது பதுங்கியெலி பிடித்தாற் போல
பொய்யுடலைக் காலனுயிர் கொண்டுபோவான்
நீச்சுநிலை யில்லையடா பிறவிவாதை
நினைவிலே கண்டறிந்தால் நிலைக்குஞ்ஞானம்
மாச்சல்வரும் போதில்கதிர் வேலாவென்று
மனதிலே தியானிக்க மறலிவாரான்
சூக்ஷமது திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுங் தோற்றமாமே. (79)

உண்டுடுத்தி யாண்மைசெய்தோ ருதவாருண்மை
உணர்வில்லா மாந்தருக்கு வருமோஞானம்
பெண்டுபிள்ளை யுள்ளவர்க்குப் பிறவிபோமோ
பின்கலையு முன்கலையு மறியார்க்குண்டோ
விண்டுகந்து முனையறிவார் மேவார்ஞானம்
விதியறிந்து வணங்கார்க்கு வெளிச்சமேது
தொண்டுசெய்து திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே (80)

பேச்சாலே மெய்ஞ்ஞானம் வருமோசொல்லு
பிறவியற்றால் சுஞ்ஞானப் பேருண்டாகும்
நீர்ச்சாவி போனக்கால் பொலிகாணாது
நிலைத்தமன மானக்கால் நிலைக்கும்ஞானம்
மூச்சாலே யோகமது முசியவேணும்
முனைகண்டா லடிகாணும் முழங்குநாதம்
சூக்ஷாதி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (81)

அமையாத கோபத்தால் மறலிவந்து
ஆக்கைவிட் டுயிர்கொடும்போ தவசரத்தில்
சமயமது வந்தடுத் தாண்டுகொள்ளும்
ஷண்முகனார் சற்குருவின் பாதம்போற்றி
இமையகிரி கொடிமுடியில் நடுவிலாடும்
என்கோமான் வள்ளிபங்க னடியைப்போற்றி
சுமைதாங்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (82)

பரியிருகால் கயறுபனி ரண்டதாகும்
பாரிலுள்ளோர் பிடிக்கறியார் பருவமாக
கரிமுகவ னாடிவணங்கிக் கடைமுச்சந்தி
கனலாறும் மயிர்ப்பாலங் கடக்கமேலே
பிரியாமல் குறிநோக்கித் திரைகள்கட்டிப்
பின்னுமுன்னும் பாயாமற் பேணிக்கொண்டு
திருநிலையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (83)

மரியாது பிறவாது வளர்ந்திடாது
வடவையண்டம் பொங்கிடினும் வாடிடாது
பிரியாது நிலையாது புரம்போகாது
பெருக்காது சிறுக்காது பிணங்கிடாது
தெரியாது பெரியோர்கள் தெரிந்துபார்ப்பார்
திசைமுகனுக் கிசையருளும் செவ்வேள்பாதம்
துரியபதி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (84)

பன்னிருகால் புரவியின்மே லேறிகாதப்
பரியினிதி முச்சந்தி மயிர்ப்பாலந்தாண்டி
வன்னியொழுக் காறுகடந் திருகோடிக்கு
மத்தியிலே,வாசிதனை நிறுத்தியப்பால்
உன்னியசை வையாமல் வாசலுக்குள்
ஊடுருவிச் சென்றிடவா னைந்தவெள்ளந்
துன்னிவருந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (85)

பெட்டியிலே அடைத்துவைத்த பாம்புதன்னைப்
பிடித்தாட்டத் தெரியாமல் புலம்புவார்கள்
எட்டிலே இரண்டுவைத்து ஆட்டினுக்கால்
இருபுறமு மாடிவர எதிரேயேறுங்
கட்டிற்குள் நில்லாது சிரசிலேறுங்
கடைவாசல் சுழிமுனையில் கட்டும்வாசி
சுட்டியின்கீழ் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (86)

பெட்டகப்பாம் பைப்பிடித்து வெளியிலேதான்
பிடித்தாட்டத் தெரியாமல் பிணமானார்கள்
வட்டெழுத்து மெட்டெழுத்தும் வகையாய்க்கொண்டு
வாய்திறவா திடம்வலமும் மாறியாடுந்
தொட்டவிட முட்டமன விடமீளாது
சொல்லாது சுழியெழுத்தில் கட்டுந்தூலஞ்
சுட்டவிடந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (87)

அக்திபக லற்றவிடக் தன்னில்வேலர்
அடியிணையை ரிஷிமுனிவ ரமரர்சித்தர்
சக்திரர்மா தவருயர் தவத்தோர்மாந்தர்
சப்தரிஷி பஞ்சகர்த்தர் சமையத்தோர்கள்
திக்திமித்தோக் திரிகிடதி தித்தாதித்தி
ஜெககணதோ மென்றுடுக் தேவதாளக்
தொக்கமிடுக் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சக்திரனுக் தோற்றமாமே. (88)

பிறக்தவர்க்கு மோக்ஷகதி தேடவேணும்
பின்கலையும் முன்கலையுஞ் சேரவேணும்
மறக்தவர்க்கு மறலிவக்தால் வலுவாருண்டு
வருமுன்னே வலுக்கட்டிக் கொள்ளவேணும்
அறக்தலைக்கு மறுமுகவன் பாதம்போற்றி
அர்ச்சனைசெய் தானுதவி யகண்டவாசல்
துறக்துநின்று திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சக்திரனுக் தோற்றமாமே. (89)

ஆதியு மனாதியுமா யப்பாலப்பால்
ஆசாரம் ஜாதிசம யங்கள்பாரார்
வேதனுல் காயசித்தி ரூபாரூபம்
மெய்யனுவா யிருருவாய் யோனிசால
வோதியுண ராதவராய் உண்மையாகி
உலகமொரு பதினாலுக் குயிருமாகி
ஜோதிவடி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சக்திரனுக் தோற்றமாமே. (91)

ஞாலமதில் பிறக்தவர்க்குத் தபசுவேணும்
சண்டாளர் செய்யார்கள் க்ஷணப்போதேனும்
காலன்வரும் போதுனக்குத் துணையாருண்டு
கருத்தினுல் தேடிவைத்தால் காக்குமுன்னே
மூலமதில் மனதுபிரி யாமல்நின்று
முன்னாட்டி யடுவிற்கண் மூடிப்பாரு
சாலம்விட்டுத் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சக்திரனுக் தோற்றமாமே, (92)

பாராதி விண்முதலாய் கடல்களேழும்
    பகிரண்ட கூடமதில் பறந்துநின்று
நீராகி நிலமனல்கால் வெளியுமாகி
    நிஷ்களமாய் நிராமயமாய் நிரஞ்சனமுமாகி
வேராகித் தூராகிக் கவராய்மேலாய்
    வித்தாகிப் பேரண்ட வெளியுமாகிச்
சூராதி சூரனென்ற துறையைப்பார்க்கில்
    சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (93)

எல்லையில்லா வயதிருந்த இடத்தைக்காணார்
    இருவருக்கு மொருவயதா யிருந்தாரங்கே
தில்லைதனில் நடமாடுந் தேகந்தன்னைச்
    சிதம்பர விலாசமது திலதமாகும்
சொல்லவென்றால் நாவுமுண்டோ மௌனவீட்டை
    துதித்தவர இருதயசுத் தந்தான்வேணும்
தொல்லையறுந் திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (94)

போக்குவரத் தறிந்தவனே யோகியாகும்
    பொறிபுலன்க ளற்றவனே ஞானியாகும்
வாக்குறையா திருந்ததினால் மௌனியாமோ
    மனமிறந்த விடத்தில்நின்றால் மௌனியுள்ளம்
தேக்கியிருந் தவன்மௌனி யோகிஞானி
    ஜென்மமில்லை மரணமில்லை சேஷமுன்னே
தாக்குமது திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (95)

ஜெகமீதில் பிறந்துவளர்ந் தாண்மைகொண்டு
    தேகத்தைப் பேணாமல் போகமுற்று
மகவாசை யாய்ச்சிலபேர் மாய்கையொன்றி
    மண்ணாசை யாய்ச்சிலபேர் மடிந்துபோனார்
அகமானத் தைவிலக்கி உள்ளன்பாலே
    ஆனந்த வெள்ளமதி லழுந்தினாக்கால்
சுகமாகுந் திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (96)

கற்றதினால் வினைமூன்று மறியமாட்டார்
    கருத்தடங்கி மூலமுற்றால் கழியுங்காமம்
அந்தமதில் சத்திசில மறியமாட்டார்
    அறிந்தாலு முனையார்க ளறிவிற்காணுஞ்
சித்தமொன்று யுருகிநின்று தலத்தைநாடிச்
    சேர்ந்தவர்க்கு மோக்ஷகதி சித்தியாகும்
சுத்தமிகுந் திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (97)

தீக்கிரைகள் கொடுப்பதற்கு உலகத்தோர்கள்
    தேகமதை வளர்த்தார்கள் ஜெகமேழ்ரெண்டுள்
பேதிக்க மனமறியா வருமைநீக்கிப்
    பெண்டுபிள்ளை தனைநினைந்து பிணமதானார்
தெகிப்பது மனத்தியல்லா லறியமாட்டார்
    தீவீட்டில் தேகமதை தெகிக்கமாட்டார்
சுகிக்கலாந் திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (98)

பிறந்திறக்குந் தெய்வத்தைப் பெருமையாக்கிப்
    பேயாடிப் பிணமாகிப் போனார்மாந்தர்
மறந்திடுமே நெஞ்சறியா மனதுதானும்
    வதிலவனே ஒருவனதி லவன்வேறுண்டோ
பிறந்ததில்லை பிறந்தபேர்ச் சடலந்தன்னைப்
    புகுவதற்கு இடமுண்டோ புருவமையக்
துறந்துநிதி திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே (99)

சங்கமதில் மூவர்நின்ற இடந்தானேது
    சரவணனுங் குமரனென்ற பெயர்தானேது
பொங்கமிகுஞ் சத்திதனைக் கண்டுஆய்ந்து
    புவியதனில் அநேகருடன் வாழ்ந்தாரப்பா
சங்கடமாய் மாய்ந்தவர்கள் கணக்கோயில்லை
    சத்தியமாய்க் கூறுகிறேன் அறிந்தோர்கூறுர்
துங்கமிகுந் திருவாடு துறையைப்பார்க்கில்
    சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (100)

சிந்தினதைப் பொருக்கிஒன்றாய்ச் சேர்க்கமாட்டார்
திருடனைக் கண்டுதெரி சிக்கமாட்டார்
அந்தரத்தில் போகும்வழி யறியமாட்டார்
அறுமுகமு மொருமுகமா யறுகோணத்துள்
உழுதுபயி ரிட்டவர்தா னுண்ணலாகும்
ஒருமனதா லறிவாநின் றுணர்ந்துபாரு
தொழுதருகித் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (101)

பந்தமெனுஞ் சம்சாரந் தன்னில்மூழ்கிப்
படிமீது ஞானமதை மறந்துவீணாய்
இந்தநில மதனிலே யிருக்கொண்ணாது
இருக்கிடிலோ அவர்களுக்கு முத்தியில்லை
சந்ததமு மில்லா ததிலுள்ளபேர்கள்
தண்ணியின்மேல் பாசிநிற்குந் தகமையாளோர்
சிந்தனையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (102)

பூதலத்தில் அண்டர்களும் காணாடு
புனிதமுட னிருப்பதனை யாருங் காணார்
காதகராம் அரக்கர்களை வருண்டு
கருத்துடனே அவர்களையுங் கடந்துமேலோர்
மீதலத்தில் அரியதொரு நாட்டைக்கண்டு
மிகுபுகழை அடைந்திடுவார் நீதியீதாம்
சோதனையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (103)

தற்பரனின் ஐந்துசிர மறைந்ததெங்கே
தலையதனிற் கெங்கைதனைச் சுமந்ததெங்கே
விற்பனர்கள் தம்முடைய மனதில்தோன்றும்
விளக்கதுவே ஞானமல்லால் வேறொன்றில்லை
சற்குருவின் தூயபாதம் பணிந்துபோற்றித்
தயவதனா லவர்களிட மறியவேண்டும்
சொற்பொருளாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (104)

சண்டநின்ற விடமதனை யறிந்துகொண்டு
தன்மனதி லுள்ளதொரு வாசிதன்னை
உண்மையுட னிருதயத்தி லிருத்திக்காட்டி
ஒன்பதுமா வாசலை யடைத்துப்பார்க்கில்
கண்டனையாய்க் காலன்வந்து பார்த்தருட்டிக்
கனஉயிரு மில்லையென நினைத்துப்போவான்
துண்டனையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே (105)

வாசிதனைத் திரிகடிகை நிறுத்திவைத்து
வலமான மன்மதனை நிலையொன்றாக்கி
பேசியதோர் கண்செவியை யடைத்துவிட்டுப்
பேணியதோர் நிஷ்டைதனி லிருக்கிலென்றன்
ஆசிரிய னெனமதித்து வணக்கிப்போற்று
அன்னவனே உனக்குறுதி யாவானப்பா
தேசிதனித் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (106)

காலைதனி லெழுந்துகங்கை நீரிலாடிக்
கருத்துடனே கதிரவனை நோக்கிநின்றால்
நாளையப்பா நாட்களின்னு மநேகஞ்செல்லும்
நாம்சொன்ன மொழியதனை நயந்துபார்க்கில்
வேலையென்ற வேலையது வொன்றுமில்லை
வினைநத் திரிவதனால் ஞானமுண்டோ
சோலைசூழ் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (107)

வாக்கதனில் பொய்சொல்லல் திருடல்குற்றம்
வகையுடனே ஞானமதை யறிந்துகொண்டு
நாக்குதனி லிழ்பாகந் தள்ளிவிட்டு
நடுமுதலை யறிந்ததற்கு மேலேநோக்கில்
வாக்கியமாய் நடுவெழுத்து முதலேகாணும்
வர்மமுட னதையறிந்து ஆய்ந்துகொண்டால்
சூக்குமமாய்த் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (108)

தத்துவர் தொண்ணூற்றாறும் வேதம்நாலும்
சாஸ்திர சமயம்பன் னிரண்டினோடு
சித்துயெட்டு கலைக்ஞான மறுபத்துநாலும்
தெளிந்தவர்க்கு ஜெனனமொடு மரணமில்லை
உற்றுப்பா ரடைப்பெல்லாம் வெளியாய்த்தோணும்
ஓசையிட்ட மணிபூரகம் பேசலாகும்
சுத்தெல்லாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (109)

விளக்கிருக்கும் வீடறியார் குருக்களோநீர்
மின்னொளிபோல் மின்னொடுங்கும் வீட்டைப்பாரீர்
பழக்கமிடுங் குறம்பைதனை பாழென்றெண்ணிப்
பராபரத்தில் பரந்தோன்றும் பான்மைபாரீர்
களக்குருக்கள் சொன்னதைநீர் பொருளென்றெண்ணிக்
காவடியில் மலர்பரிப்பீர் கருத்தைப்பாரீர்
துளக்கருத்தால் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (110)

கற்பிறவி யதிரூப மானசோதி
காட்டமுடன் நடுவணைமேல் நடனமாடும்
அரவின்மணி பிரகாச மூலமான
அகாரமெனுந் திருவடிமேல் அமர்ந்தசோதி
புரவியெனு மிருபத்தோ ராயிரத்து அறுநூறு
பொருந்தியே வாசியெனும் புரவியேறி
சுரவிதருந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (111)

கருவிகர ணாதிகளும் பகுத்துப்பார்க்கில்
கைக்கனிபோல் ஒளிதோன்றுங் கால்மேல்கீழாய்
மருவிமண் டலத்தினுள்ளே நடனமாடும்
மாவடியைக் கடந்து அப்பால் வாசியேறும்
உருவிகர வெளியூடு தாக்கிப்பார்க்கில்
ஓவ்வென்ற அகாரமே யொடுங்கிநிற்குஞ்
சுருதியெனுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (112)

அப்பிறக்து மண்ணிறந்த அழலும்செத்து
அஞ்செழுத்தும் வழியோடு மதனைப்பாரீர்
பொற்பிறந்த மூலவங்கி தன்னைமூட்டிப்
புண்டரீக வாழ்க்கைதன்னைப் போதவுண்டு
முற்பிறந்த பிறப்பறியா துளல்வீரய்யா
மூன்றெழுத்து மோரெழுத்தா முறையைப்பாரீர்
சொற்பிறந்த திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (118)

கோவிலுக்கு ஒன்பதுவாம் வாசல்விட்டுக்
குவலயத்தோர் கொண்டாடிக் குடியிருந்த
மூவர்களு மறியார்கள் மூலஸ்தானம்
முதல்வாசல் கடையோர முன்மையந்தான்
தேவாசுசியமிதுதான் செப்பொண்ணாது
தில்லைகட மாடுகின்ற செவ்வேள்தானும்
தூவிமகா மேர்முடியிர் துறையைப்பார்க்கில்
சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே. (114)

அகஸ்தியர் அருளிச்செய்த அருள்ஞான சாஸ்திர மென்னும்

துறையறி விளக்கம்.

முற்றிற்று.

முதல் பதிப்பு காப்பி 1000. 1953.

உ

புதிதாய் அச்சிட்டிருக்கும்

# அகத்தியர் சாஸ்திரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அகத்தியர் பரிபூரணம் 1200 | ரூ 3 | 8 | 0 |
| 2. | ஷை மணக்கோலம் 200 } | | | |
| 3. | கனகமணி 100 } | | | |
| 4. | வயித்தியக் கோவை 125 } | | | |
| 5. | வயித்தியத் திரட்டு 81 } | | | |
| 6. | சிறக்கு சாஸ்திர மெனனும் கிரிகைநூல் 64ஆ 5 சாஸ்திரங்கள் சேர்ந்தது | 1 | 4 | 0 |
| 7. | ஷை சௌமதி நூல் 400 | 1 | 4 | 0 |
| 8. | ஷை தற்க சாஸ்திரம் 300 | 0 | 14 | 0 |
| 9. | ஷை கற்ப முப்புக் குருநூல் 100 } | | | |
| 10. | மனோன்மணி தீட்சை 100 } | | | |
| 11. | காற்பத்து முக்கோணபூசை 41ம் சேர்ந்தது | 0 | 12 | 0 |
| 12. | ஷை பூரண சூஸ்திரம் 216 | 0 | 12 | 0 |
| 13. | ஷை பூரணம் 205 } | | | |
| 14. | ஷை சூத்திரம் 21ம் சேர்ந்தது } | 0 | 12 | 0 |
| 15. | ஷை பரிபாஷை 300 | 0 | 12 | 0 |
| 16. | ஷை பன்னிரு காண்டம் 200 | 0 | 14 | 0 |
| 17. | ஷை பூஜா விதி 200ம் } | | | |
| 18. | ஞானசைதன்யம் 51 சேர்ந்தது } | 0 | 12 | 0 |
| 19. | ஷை வகார சூஸ்திரம் 200 } | | | |
| 20. | ஷை சுருக்கம் 100 சேர்ந்தது } | 0 | 14 | 0 |
| 21. | ஷை தத்துவம் 300 | 1 | 0 | 0 |

மேல் கண்ட 12 புஸ்தகமும் 21 சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோ பயிண்டு செய்த அகத்தியர் கோர்வை. ரூ 12 0 0

இன்னுமனேக சித்த வைத்திய சாஸ்திரங்களுமிருக்கிறது வேண்டியவர்கள் நேரிலும் தபால் மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜீ. இராமசாமிக்கோன்.

**இ. ராம. குருசாமிக் கோனார் சன்,**

புத்தக சாலை புதுமண்டபம், மதுரை.

# புத்தக விளம்பரம்.

| அகஸ்தியர். | ரூ—பாய். |
|---|---|
| ஷை பரிபூரணம் 1200. அச்சில் | |
| ஷை ஐந்து சாஸ்திரங்கள் | 2—00 |
| ஷை கௌமதி நூல் 400 | 2—00 |
| ஷை தற்க சாஸ்திரம் 300 | 1—50 |
| ஷை கற்பமுப்பு குருநூல் | 1—50 |
| ஷை பூரணசூஸ்திரம் 216 | 1—50 |
| ஷை வைத்திய பூரணம் 205 | 1—50 |
| பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான | |
| ஷை பன்னிரு காண்டம் 200 | 1—50 |
| ஷை பூஜாவிதி 200 | |
| ஞான சைதன்யம் 51-ம் சேர்ந்தது | 1—50 |
| ஷை வகார சூஸ்த்திரம் 200 | |
| ஷை சுருக்கம் 100-ம் சேர்ந்தது | 1—50 |
| ஷை தத்துவம் 300 அச்சில் | |
| ஷை பரிபாஷை 300 | 1—50 |
| ஷை துறையறி விளக்கம் | 0—50 |
| காகபுசண்டர் பெருநூல் காவியம் ௲ | 5—00 |
| கோரக்கர் மலைவாகடம் | 3—00 |
| போகர் கற்பம் 300 | 1—50 |
| திருவள்ளுவர் கற்பம் 300 | 2—50 |
| புலஸ்தியர் கற்பம் 300 | 1—50 |
| பீரங்கி முனிவர் ஜோதிடம் 300 | 0—75 |
| பெரிய கந்தரநுபூதி. | 0—50 |
| கருவூரார் தொண்டிவாதகாவியம் 700 | 2—00 |

இராமதேவ ரென்ற யாகோபு சாஸ்திரங்கள் யாவும் இருக்கின்றன கேட்லாக் எழுதினால் அனுப்பக்கூடும்.

ஜி. இராமசாமிக் கோன். புக்ஷாப்
நெ 4 குருசாமிக் கோனார் சந்து வடக்குமாசி வீதி, மதுரை.